செ.வெ.எண்:107/2026 நாள்: 06.02.2026

**சேலம் ஆவின் நிறுவனத்தில் காலியாக உள்ள 2 கால்நடை மருத்துவ ஆலோசகர் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

**மாவட்ட வருவாய் அலுவலர்/பொது மேலாளர் திரு.பி.குமரேஸ்வரன் அவர்கள் தகவல்**

---

சேலம் ஆவின் நிறுவனத்தில் காலியாக உள்ள 2 கால்நடை மருத்துவ ஆலோசகர் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இது குறித்து மாவட்ட வருவாய் அலுவலர்/பொது மேலாளர் திரு.பி.குமரேஸ்வரன் அவர்கள் தெரிவித்துள்ளதாவது,

சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் (ஆவின்) தற்போது 782 பிரதம சங்கங்களின் மூலம் தினசரி சராசரியாக 6,72,000 லிட்டர் பால் கொள்முதல் செய்து, பால் உற்பத்தியாளர்களுக்கு பணம் பட்டுவாடா செய்து வருகிறது. தமிழ்நாடு அரசு தற்போது பால் உற்பத்தியை அதிகரிக்கவும் கிராமப்புற விவசாயிகளின் கறவைகளுக்கு அனைத்து மருத்துவ வசதிகள் கிடைத்திடவும் அதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரம் வளம் பெற்றிடவும், முனைப்புடன் திட்டங்களை செயலாற்றி வருகின்றது. அதன்படி புதிய கால்நடை மருத்துவ வழித்தடங்கள் அமைக்கப்பெற்று தற்போது இருக்கும் கால்நடை மருத்துவர்களுடன் காலியாக உள்ள 2 கால்நடை மருத்துவ ஆலோசகர் பணியிடங்கள் ஒப்பந்த அடிப்படையில் 10 மாதங்களுக்கு ரூ.45,000/- சம்பளம் மற்றும் ஊக்கத்தொகையுடன் சேலம் ஆவின் நிறுவனத்தின் மூலம் நிரப்பப்படவுள்ளது.

மேற்கண்டபடி, ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக பணிபுரிய விருப்பமுள்ள கால்நடை மருத்துவ பட்டதாரிகள் தங்களைப் பற்றிய முழுமையான விவரங்களுடனும், உரிய பட்டப்படிப்பு கால்நடை மருத்துவ கவுன்சில் சான்றிதழ்களுடனும் 13.02.2026 அன்று நடைபெறும் நேரடி நியமன தேர்வில் கலந்து கொள்ள காலை 11.00 மணிக்கு பொது மேலாளர், சேலம் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட், சித்தனூர், தளவாய்ப்பட்டி (அஞ்சல்), சேலம் - 636 302 என்ற முகவரிக்கு நேரில் உரிய ஆவணங்களுடன் கலந்துகொள்ள அழைக்கப்படுகிறார்கள். இவ்வாறு மாவட்ட வருவாய் அலுவலர் / பொது மேலாளர் திரு.பி.குமரேஸ்வரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு – செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சேலம் மாவட்டம்.

Salem 24x7 IPROSalem PRO Salem pro.slm PRO Salem